**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 284/2008**
**நாள்.16.10.2023**
**பி.வா.சா.1- மூக்கன் அம்பலம்**

**வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. தாவா சொத்துக்கள் 1ம் வாதிக்கு ஆதியில் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 1ம் வாதிக்கு, 2ம் வாதி மகள் என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் ஒரு பகுதியை முருகன் அம்பலம் என்பவரிடம் இருந்து நான் கிரையம் பெற்றதாக எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கும் போது தாவா சொத்துக்களின் மூல ஆவணங்களை பார்த்து தான் வாங்கினேன். சொத்துக்களை கிரையம் வாங்கும்போது வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் வில்லங்கம் இல்லை என்று சொன்னார்கள். வழக்கு சொத்துக்களின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண்.455/1, 455/2, 464 ஆகும். வேறு சர்வே எண்கள் சரியான ஞாபகம் இல்லை. மேற்படி சர்வே எண்களுக்கு நான்குமால் தெரியுமா என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கு சொத்துக்களை பொறுத்து ஆதி பாத்தியஸ்தர்களான குப்பாயம்மாள் கடந்த 10.09.1970ம் தேதி ஆறுமுகம் பிள்ளை என்பவரிடம் இருந்து ரூ.6000/-க்கு ஈடு கடன் ஆவணம் மூலம் எழுதி பெற்றுள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் அந்த ஈடு கடனை அடைத்து தான் நான் கிரையம் வாங்கினேன். எனக்கு கிரயம் செய்து கொடுத்த முருகன் அம்பலம் என்பவர் 1ம் வாதி குப்பம்மாளின் உடன் பிறந்த சகோதர் என்றால் சரிதான்.

2. 1ம் வாதி குப்பம்மாளை குப்பாயம்மாள் என்றும் அழைப்பார்கள். 1ம் வாதி ஆறுமுகம் பிள்ளையிடம் இருந்து பெற்ற ஈடு கடனை அடைக்க முடியாததால் அவரது சகோதர் முருகன் அம்பலத்திடம் கடனை அடைத்து தாவா சொத்துக்களை அடைந்து கொள்ளுமாறு கன்டிசன் செட்டில்மெண்ட் 1973ம் ஆண்டு எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த கடனை நான் தான் அடைத்தேன். மேற்படி முருகன் அம்பலம் கன்டிசன் செட்டில்மெண்ட் படி கடனை அடைக்கவில்லை என்றாலும்,

நான் தான் அடைத்தேன் என்றாலும், முருகன் அம்பலம் கடனை அடைக்க சொன்னதால் தான் நான் கடனை அடைத்தேன். மேற்படி கடனை அடைப்பதற்கு நான் ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ரசீது எதுவும் நான் வாங்கவில்லை. ஆறுமுகம் பிள்ளையிடம் இருந்து பெற்ற கடனை முருகன் அம்பலமோ, நானோ அடைக்கவில்லை என்றாலும், கடனை அடைத்ததாக நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. ஆறுமுகம் பிள்ளையிடம் பெற்ற கடனை அடைக்கவில்லை என்பதால் குப்பம்மாளுக்கு எதிராக அவர் வழக்கு தாக்கல் செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி வழக்கை குப்பம்மாள் பணம் செலுத்தி முடித்து செல் ரசீது பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. செல் ரசீது எழுதி பெற்ற பின்னர் தாவா சொத்துக்களை தற்போது வரை 1ம் வாதியும், அவரது மகள் நாச்சம்மாளும் தான் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கு வாதிகள் பெயரில் பட்டா ஏற்பட்டு, கிஸ்தி செலுத்தி அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

3. மேற்படி செட்டில்மெண்ட் நிபந்தனைப்படி ஈடு கடனை செலுத்தாததால் முருகன் அம்பலம் எழுதி பெற்ற கன்டிசன் செட்டில்மெண்ட் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. முருகன் அம்பலம் மேற்படி கன்டிசன் செட்டில்மெண்ட் படி நிறைவேற்றாததால் முருகன் அம்பலத்திடம் இருந்து நான் வாங்கிய கிரையம் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. செல் ரசீது பெற்ற பின்னர் கன்டிசன் செட்டில்மெண்டை 1ம் வாதி ரத்து செய்து விட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நானும், முருகன் அம்பலமும் கன்டிசன் செட்டில்மெண்ட் படி கடனை செலுத்தாததால் தான் 1ம் வாதி அதை ரத்து செய்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை வாதிகளை அனுபவம் செய்யவிடாமல் வேண்டும் என்றே இடைஞ்சல் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதிகளை இடைஞ்சல் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தான் முருகன் அம்பலத்திடம் இருந்து தாவா சொத்தை நான் கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய விசயம் எதிர்வழக்குரை தாக்கல் செய்த போது தான் வாதிகளுக்கு தெரிய

வந்தது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை நல்ல எண்ணத்தின் அடிப்படையில் நான் கிரையம் வாங்கவில்லை என்றாலும், கன்டிசன் செட்டில்மெண்ட் படி நடந்து கொள்ளாமல் இருந்து வந்து அதனால் செட்டில்மெண்ட் ரத்து செய்யப்பட்டதால் நான் வாங்கிய கிரையம் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

4. முருகன் அம்பலம் இறந்துவிட்டார். குப்பம்மாளும் இறந்துவிட்டார். நாச்சம்மாள் தான் தற்போது தாவா சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் தான் அனுபவித்து வருகிறேன். தாவா சொத்துக்களை வாதிகள் அனுபவம் செய்து வருவதால் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும், நான் தாவா சொத்துக்களை அனுபவம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் ஆண்டி பெருமாளிடம் இருந்து வாங்கிய கிரய சொத்தையும், நாச்சம்மாளிடம் வாங்கிய கிரைய சொத்தையும், குப்பம்மாளிடம் இருந்து கன்டிசன் செட்டில்மெண்ட் படி பெற்ற கிரைய சொத்தையும் பற்றி தேவையின்றி எனது எதிர்உரையில் கூறியுள்ளேன் என்றாலும், கன்டிசன் செட்டில்மெண்ட் மூலம் முருகன் அம்பலத்திடம் இருந்து வாங்கிய பொய்யான கிரய சொத்துக்களை மட்டுமே சேர்த்து வழக்கில் பரிகாரம் கேட்டுள்ளார் என்றாலும் சரியல்ல. நான் வாங்கிய கிரையம் செல்லத்தக்கதல்ல என்பதால் பிராதுப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

Digitally signed by
R VANJI NATHAN
**Principal District Munsif**
**Vedasandur**